மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தේසියම්

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 73 | 04.06.2023 (ஞாயிற்றுக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00



## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான படுகொலை முயற்சி

## இலங்கை அரசினுடைய இனவாத கோரமுகத்தின் மற்றொரு வெளிப்பாடேயாகும்!

## சீமான் கடும் கண்டனம்

பக்கம் 5

## மக்கள் பிரதிநிதிகளுக்கே இந்தநிலை என்றால் மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள்

### – முருகேசு சந்திரகுமார் –

யாழ்ப்பாணம் வடமராட்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் சம்பவம் நாட்டில் தமிழ் மக்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள் என்பதனை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான

பக்கம் 5

## கஜேந்திரகுமார் மீதான செயற்பாட்டை அரசின் ஜனநாயக விரோத செயலாகவே பார்க்கின்றோம்

### சி. வி. கே. சிவஞானம் சீற்றம்!



பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான கொலை முயற்சியை அரசின் ஜனநாயக விரோத செயலாகவே பார்க்கின்றோம் என வடக்கு மாகாணசபை அவைத் தலைவர் சி வி கே சிவஞானம் தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் மீதான கொலை முயற்சி தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்

பக்கம் 5

## கஜேந்திரகுமார் மீதான தாக்குதல்:

## வடக்கில் சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்பதற்கு மிக அப்பட்டமான எடுத்துக்காட்டு:

### சட்டத்தரணி என்.சிறீகாந்தா



பக்கம் 5

வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கில் மருதங்கேணியில் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மீது பொலீஸார் சிலரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும், அவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலும், வடக்கில் சட்டம் மற்றும் ஒழுங்கு என்பன எவ்வளவு தூரம் சீர்குலைந்துள்ளன என்பதற்கு மிக அப்பட்டமான எடுத்துக்காட்டு ஆகும். என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவ்வறிக்கையில்,

தாக்குதல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வாக்குவாதம் மட்டுமே நிகழ்ந்தது என்றும், பொலீஸ் துறையின் ஊடகப் பேச்சாளர் கூறியிருப்பது நிகழ்த்தப்பட்ட



## ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ச குடும்பம் விசாரிக்கப்பட வேண்டும் :

### சிவஞானம் சிறிதரன் வலியுறுத்து

இலங்கைத் தீவிலே ஒரு நீதியான ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால் பல்வேறுபட்ட ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மகிந்த ராஜபக்ச குடும்பம் விசாரிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகமான அறிவகத்தில் நேற்று (03-06-2023) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பக்கம் 5

## கஜேந்திரகுமார் மீதான தாக்குதல் முயற்சி மிலேச்சத்தனமானது செல்வம் எம் பி காட்டம்!

கஜேந்திரகுமார் எம்.பி மீதான புலனாய்வாளர்களின் தாக்குதல் முயற்சி தமிழ் மக்களுக்கு விடப்படும் அடுத்தகட்ட அச்சுறுத்தல் என்பதோடு மிலேச்சத்தனமானதுமாகும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது புலனாய்வாளர்கள் தாக்குதல் முயற்சியை மேற்கொள்ள முனைந்தமைக்கு கண்டனம் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்



பக்கம் 5

## பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால் வட, கிழக்கு மக்களின் நிலை குறித்து சிந்தியுங்கள்

### - விக்கினேஸ்வரன் எம்.பி -



பக்கம் 5

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே மிகமோசமாக நடத்தப்படும் பட்சத்தில், வட - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்கள் இராணுவத்தினரால் எவ்வாறு நடத்தப் படக்கூடும் என்பதை ஒட்டுமொத்த உலகமும் புரிந்துகொள்ளவேண்டும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

## 33 வருடங்களின் பின்னர் பொத்துவில் கனகர் கிராம மக்கள் குடியேற்ற ஏற்பாடு!



1990களில் இடம்பெயர்ந்த பொத்துவில் அறுபதாம் கட்டை கனகர் கிராம மக்கள் 33 வருடங்களின் பின் மீள்குடியேற வசதியாக காடு மண்டி கிடந்த அப் பிரதேசம் இரண்டாம் கட்டமாக நேற்று (3) சனிக்கிழமை துப்பரவாக்கல் பணி இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அங்கு சமுகமளித்திருந்தார். இப் பிரதேசம் ஜேசிபி இயந்திரம் மூலம் துப்பரவாக்கப்பட்டு வருகிறது. பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் சமுக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் அரச அனுமதியுடன் இப் பணியில் ஈடுபட்டு வருகிறார். கனகர் கிராம மக்களும் படையினரும் சமுகமளித்திருந்தனர்.

226 பேரில் முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படவிருக்கிறது.

## அந்-நூர் மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவு: பாடசாலை சமூகம் பாராட்டு




கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலய மாணவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கணித ஒலிம்பியாட் (Olympiad) போட்டி அண்மையில் இடம்பெற்றது. மேற்குறித்த போட்டி நிகழ்ச்சியில் அந்-நூர் மகா வித்தியாலயம் சார்பாக கலந்துகொண்ட ஜே.இஸ்ஸத் பானு, எம்.எம்.அஹமட் ஆகியோர் கூடிய புள்ளிகளை பெற்றுக்கொண்டனர்.

குறித்த போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அதிகூடிய புள்ளிகளுடன் வெற்றி பெற்று தமது வலயத்திற்கும் பாடசாலைக்கும், பெருமை சேர்த்த மாணவர்களுக்கு பாடசாலை சமூகத்தினர் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள், பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் பாடசாலை சமூகத்தினர் நன்றி தெரிவிக்கின்றனர்.

## வடக்கு கிழக்கில் பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்த இந்தியா உதவுமா...? மனோ கணேசன் வெளியிட்ட தகவல்



தமிழர்கள் அதிகளவில் வாழும் வடக்கு கிழக்கில் பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்த இந்தியாவின் உதவியை கூறுவதால் எவ்வித பயனும் இல்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமது நாட்டில் தோன்றிய பௌத்தத்தை மற்ற இடங்களிலும் வளர வேண்டும் என்றே இந்தியா விரும்பும் என்பதனால் இந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்தியாவின் ஆதரவு கிடைக்கும் என்பதில் சந்தேகமே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்த இந்தியாவின் உதவியை கோருவதற்கு பதிலாக, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண உள்ளூர் நடவடிக்கைகளை எடுக்க தமிழ் அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## தமிழர்களின் நிலையை புரிந்து கொண்ட கனடா..! இந்தியா தமது நலன்களிற்காகவே செயற்படுகின்றது..! சுரேஷ் ஆதங்கம்..!



சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தையிட்டி புத்த விகாரையினை அகற்றுவதற்கு அனைத்து தமிழ் மக்களும் மற்றும் தமிழ் தரப்புகளும் ஒன்றிணைய வேண்டும் எனவும், தமிழர்களின் அரசியல் அபிலாசையாகவுள்ள வட - கிழக்கு இணைக்கப்பட்ட மக்களின் இறைமைக்காகவும் சுயநிர்ணய போன்றவற்றிற்கும் இந்தியா சர்வதேசத்தில் குரல் கொடுக்க வேண்டும் எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தையிட்டி புத்த விகாரைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில்,

தையிட்டி புத்த விகாரையானது தமிழ் மக்களின் காணிக்குள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது. அதனால் அதனை அகற்றும் பொருட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி பிரதேச மக்களுடன் இணைந்து 3 ஆம் கட்டமாக போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றோம்.

அதனை போன்று ஏனைய அரசியல் கட்சிகள் , பொது அமைப்புக்கள் மற்றும் மக்கள் என அனைவரும் இணைந்து தடைந்து முன்னெடுத்தால் இது அகற்றப்படுவதற்கான வாய்ப்புள்ளது.

தமிழர்கள் உரிமை சார்ந்த போராட்டத்தில் அவர்களின் நிலம் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால் மட்டுமே தமிழர்களால் இந்த நிலங்களில் நீண்ட காலமாக நிலைத்திருக்க முடியும்.

நிலமிழந்து போனால் பலமிழந்து போகும் பலமழிந்து போனால் இனமழிந்து போகும் என்று கவிஞர் புதுவை இரத்தினத்துறை கவிதையினை வடித்துள்ளார். அந்த அடிப்படையிலே இந்த விடயங்களை கருத்தில் கொண்டு தமிழர்களின் தாயகங்களில் இடம் பெறும் துரித காணி அபகரிப்புக்களை தடுக்காவிடில் எமது சந்ததி இந்த மண்ணில் நீண்ட காலத்திற்கு இருக்காது.

எனவே, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கடந்த 75 வருடங்களாக மக்கள் கோரியுள்ள போதிலும் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், வடகிழக்கினை சேர்ந்த தமிழர் தாயகத்தை அபகரிக்கும் நோக்குடனே தமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

எமது மக்கள் மீது தொடர்ந்து திணிக்கப்பட்ட போராட்டம் 2009 மே 18 பாரிய இனவழிப்புடன் முடிவடைந்துள்ளது. ஆயினும், மக்களிடம் இனப்படுகொலை நடந்தமைக்கான தெளிவான ஆதாரங்கள் உள்ளன. அதனால் இன்று உலகம் கண்விழித்துள்ளது.

அந்த வகையில், கனேடிய பிரதமர், திட்டவட்டமாக இனவழிப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது என்று அந்த அடிப்படையில் மே 18 இனவழிப்பு நாளாக அறிவித்துள்ளார். இந்தியாவை பொறுத்த மட்டில் இந்த விடயத்தில் வெட்கி தலை குனிய வேண்டும்.

இந்தியாவை நம்பியுள்ள ஈழத்து தமிழர்களின் நிலை எங்கோ உள்ள கனடா பிரதமருக்கு விளங்கியுள்ளது. ஆனாலும், இந்தியாவிற்கும் விளங்காது என்று அல்ல. அவர்கள் கடந்த காலங்களில் தமிழினம் அழிந்தாலும் பரவாயில்லை என்ற அடிப்படையில் தமது நலன்களிற்காக செயற்பட்டுள்ளனர்.

1970 ஆம் ஆண்டு கால பகுதியில் இலங்கையை மையப்படுத்தி நடந்த பூகோள அரசியல் போட்டி இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே பனிப்போரை ஏற்படுத்தியது. அதனால் தன்னுடைய நலனுக்காக இலங்கையில் தமிழர்களை பல்வேறு இயக்கங்களாக இந்தியா உருவாக்கி இங்கு இனம் அழிந்து போவதற்காக ஆபத்தான நிலையை உருவாக்கியது. அந்த நிலைமையே தற்பொழுதும் உள்ளது.

ஒற்றையாட்சியை திணித்து தமிழ் மக்களை சிங்களவர்களின் கட்டுப்பாட்டிற்குள் கொடுக்கும் நிலையே இன்று காணப்படுகின்றது. ஆகவே, இந்தியா தமது நிலைப்பாட்டினை மாற்றியமைத்தல் வேண்டும்.

இந்த தீவில் தமிழர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு சிங்களவர்களுடன் சம உரிமையுடன் வாழ்வதற்குரிய தமிழர்களின் தேசம் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே இந்தியாவிற்கும் சாதகமான சூழ்நிலை வரும். இல்லையெனில், இலங்கையை மையமாக கொண்டு நடக்கும் பூகோள அரசியல் போட்டியால் இலங்கை அரசு சீனாவுடன் செல்கின்ற நிர்ப்பந்தமான சூழ்நிலை வரலாம்.

அந்த வகையில் தமிழர்களின் அரசியல் அபிலாசையாகவுள்ள வட கிழக்கு இணைக்கப்பட்ட மக்களின் இறைமை,தமிழர்களின் தேசம் மற்றும் தமிழர்களின் சுயநிர்ணய போன்றவற்றை அங்கீகரிக்கும் விதமாக இந்தியா சர்வதேசத்தில் குரல் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# வவுனியா ஓமந்தை அலைகல்லு போட்ட குளத்தில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலய ராஜகோபுரம் அடிக்கல் நாட்டு நிகழ்வு



நேற்று வவுனியா ஓமந்தை அலைகல்லு போட்ட குளத்தில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலய ராஜகோபுரம் அடிக்கல் நாட்டு நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் அம்மையார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்

மேலும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான குலசிங்கம் திலீபன், பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோதாரலிங்கம் , சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா அவர்களுடன் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் அவர்களின் செயலாளர் லியாகத் அலி அவர்களும் முன்னால் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி சத்தியலிங்கம் ஆகியோருடன் வைத்தியர் அச்சுதன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் குணபாலன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்

தொடர்ந்து எலயன்ஸ் நிதி நிறுவனத்தின் வவுனியா குருமன்காடு கிளையினரின் அனுசரனையுடன் மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது

# தியாகி பொன் சிவகுமாரனின் நினைவேந்தலுக்கு அழைப்பு!



தியாகி பொன் சிவகுமாரனின் நினைவேந்தலின் போது அரசியல் கட்சிகள் எவ்வித அரசியல் பேதமுமின்றி பங்கேற்க வேண்டுமென நினைவேந்தல் குழு அழைப்பு விடுத்துள்ளது.

தியாகி பொன் சிவகுமாரின் 49வது ஆண்டு நினைவேந்தல் யூன் மாதம் 5ம் திகதி இடம் பெறவுள்ள நிலையில் அது தொடர்பான ஊடக சந்திப்பு நினைவேந்தல் குழுவினரால் இன்று நடாத்தப்பட்டது.

நினைவேந்தல் மேலும் கருத்து தெரிவிக்கும்போது, தியாகி பொன் சிவகுமாரனின் 49 ஆவது நினைவேந்தல் எதிர்வரும் திங்கட்கிழமை(05) யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் அனுஸ்டிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நினைவேந்தலில் அரசியல் கட்சிகள் அரசியல் பேதமின்றி பங்கேற்க வேண்டும். மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் நினைவேந்தல் இடத்திற்கு வந்து அஞ்சலியை மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

பொன்.சிவகுமாரன் ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒரு முன்னோடி ஆவார். யாழ்ப்பாணம், உரும்பிராயில் காவற்துறையினரின் சுற்றி வளைப்பில் 1974 யூன் 5ம் திகதி மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடம் வைத்தியர் சத்தியமூர்த்தி முன்வைத்துள்ள கோரிக்கை!

பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளில் அதிக கரிசனை செலுத்தி போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என வடமாகாண பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வடக்கில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை தொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஹேரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களால் பத்து பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக வடபகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களால் போதைப் பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன. அதை திடீரென தடுக்க முடி



யாது, ஆனாலும் போதைப் பொருள் பாவனைகளை குறைக்க வேண்டும்.

குறிப்பாக பெற்றோர்களும் பாடசாலைகளில் ஆசிரியர்களும் அதிக கரிசனை செலுத்தி போதைப் பொருள் பாவனையாளர்களை குறைக்க வேண்டும். பாவனையாளர்களை குறைக்காத வரையும் வேறு வழிகளில் கட்டுப்பாடுகளை போடுவதன் மூலம் அவை வேறு வடிவங்களில் மிக கூடிய விரைவில் இந்த இடங்களில் கிடைத்து விடும்.

இது உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாகும் இது தொடரவே போகின்றது.

குறிப்பாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் இளமைக்காலத்தில் அதாவது 16 வயது தொடக்கம் 26 வயது வரையான வயதெல்லைகளை கொண்டவர்களே அதிகளவில் இவ்வாறான பிரச்சனைக்குரியவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆகவே இந்த வயதெல்லை உடையவர்களை மிகவும் அவதானமாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக பெற்றோர்களும் பாடசாலைகளில் ஆசிரியர்களும் பிள்ளைகளில் அதிக கரிசனை செலுத்தி போதைப் பொருள் பாவனையை தடுக்க முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். அச்சுவேலியில் வர்த்தக நிலையத்தில் தீப்பரவல்





யாழ்ப்பாணம், அச்சுவேலி தெற்கு விக்னேஸ்வரா பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்று நேற்று (3) தீக்கிரையாகியுள்ளது. இந்நிலையில், யாழ்ப்பாண மாநகர சபை தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதும், வர்த்தக நிலையம் தீயினால் பெருமளவில் சேதமடைந்துள்ளது.

இதனையடுத்து, இந்த வர்த்தக நிலையத்துக்கு சில விஷமிகள் தீ வைத்திருக்கலாம் என வர்த்தக நிலைய உரிமையாளர் சந்தேகம் தெரிவித்து, அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சிறுவர் வன்முறை அதிகரிக்க இதுவே காரணம்..! யாழ்ப்பாண டி.ஐ.ஜி வெளியிட்ட தகவல்



பெற்றோரின் முறையான கண்காணிப்பு சிறுவர்கள் மீது இல்லாத காரணத்தாலும், அக்கறையின்மையினாலுமே 80 வீதமான சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் இடம்பெற்றுள்ளதென யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.

சங்கானையில் சிறுவர் துஸ்பிரயோகத்தை தடுத்தல் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் வன்முறைகளில் இருந்து அவர்களைக் காப்பற்ற முடியும். யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் அதிகமாகவே உள்ளன. இவ்வாறான சம்பவங்களை நாங்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்த போது, அவற்றில் 80 வீதமானவை பெற்றோரின் முறையான கண்காணிப்பு இல்லாத காரணத்தாலும், சிறுவர்கள் மீதான அக்கறையின்மையினாலுமே இடம்பெற்றுள்ளன.

இவற்றைத் தடுப்பதில் நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். சட்டத்தை உருவாக்குபவர்கள், அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பங்குண்டு. அத்துடன் ஊடகங்களுக்கும் பெரும் பங்கு உண்டு. எனவே நாம் அனைவரும் ஒன்றாகி ஒளியேற்ற முன்வர வேண்டும் என்றார்.

தேசியம்

# அரசியல் வங்குரோத்தில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி..!



பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கும் போது இந்த உலகமே இருண்டு விடுவது போல நினைத்துக்கொள்ளுமாம் அதே போல அண்மைக்காலமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் வாதிகளின் பூனை நினைப்பு அரசியல் நகர்த்தப்படும் காட்சிகளும் வெளிப்படையாகின்றன.

குறிப்பாக அந்த கட்சியில் உள்ள சட்டவாளர்களின் சட்டாம்பிள்ளைத்தனங்கள் மலினமான ஒரு திசைக்கு இந்த அரசியலை நகர்த்தி செல்ல தலைப்படுகின்றது.

போரொட்டங்களின் போது "லோயர்ஸ் வி ஆர் லோயர்ஸ்" என சிறிலங்கா காவல்துறைக்கு மேலங்கியின் கழுத்துப்பட்டியை தூக்கி காட்டி அதிகாரம் செய்யும் சட்டவாளர் தலைமுதல் சில சட்டவாளர்களின் சட்டாம் பிள்ளைத்தன கருத்துக்களும் நகர்வுகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

தமிழர் தாயகத்தில் கையறு நிலையில் உள்ள முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு உதவி செய்வதை விமர்சிக்கும் சட்டாம்பிள்ளைகள் கூட இப்போது வந்துவிட்டார்கள்.

ஆனால் அவ்வாறான சட்டாம்பிள்ளைதனம் செய்யும் அதே அரசியல் அணி பொதுமக்களின் திரள் நிலையை திரட்ட முடியாமல் வெறும் பத்து பதினைந்து பேருடன் போராட்டங்களை நடத்தி தமது அரசியல் பலவீன நிலையை வெளிக்கொண்டு வருவதையும் மறுக்க முடியாது.

அந்தவகையில், சிறிலங்காவில் இன்று கடைப்பிடிக்கபடும் பொசன் நிகழ்வை மையப்படுத்தி வலிகாமம் தையிட்டி விகாரைக்கு எதிராக தமிழ் தேசிய மக்கள் முன்னணி இன்னொரு கட்ட போராட்டத்தை ஆரம்பித்து விட்டது.

ஆனால் அவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் மக்களின் பிரசன்னம் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு கூட இல்லை, வெறுமனே 25க்கும் உட்பட்ட கட்சி உறுப்பினர்களுடன் இந்த போராட்டத்தை முன்னணி நடத்துகின்றது.

இது வெறுமனவே அவர்களின் தன்னகங்கார முனைப்பு கொண்ட ஒரு போராட்டம் என்பதால் இந்த போராட்டத்தில் தாம் இணைந்து கொள்ள முடியாத நிலை இருப்பதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் உட்பட மக்களை திரள் நிலையில் திரட்ட கூடிய தரப்புக்கள் இந்த போராட்டத்தில் இருந்து ஒதுங்கியே உள்ளார்கள்.

"லோயர்ஸ் லோயர்ஸ்" என மேலங்கி கழுத்துப் பட்டியை தூக்கி காட்டி அதிகராம் செய்யும் சட்டத்தரணிகள் உள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி தையிட்டி விகாரை விடையத்தை இதுவரை சட்டரீதியாக முன்நகர்த்திய தூரம் எவ்வளவு என ஒரு வினாவை தொடுத்து கொண்டால் அதற்குரிய பதில் நிச்சயமாக சாதகமாக வராது என்பதும் வெளிப்படையானதே.

ஆனால் மறுபுறத்தில் முக்கியமான அரசியல் பிரச்சனைகளை வெறும் அரசியல் பகட்டாரமாக செய்ய முனையும் அந்த தரப்பு ஏனைய தமிழ் தேசிய தரப்புக்களுடன் ஒத்துழைத்தும் செயற்படுவதில்லை. மாறாக எம் வழி தனி வழி என காட்சிப்படுத்தலை செய்யப்போய் அதிலும் சொதப்பிக் கொள்கிறது.

இதற்கு மறுதலையாக முன்னாள் போராளி குடும்பங்களுக்கு உதவி செய்வதை விமர்சிக்கும் அளவுக்கும் இறங்கி அதற்க்கு மேலாக சென்று ஊடகங்களையும் வசைபாடும் வகையில் தேவையற்ற ஆணிகளை அது பிடுங்கி கொள்ள தலைப்படுகிறது.

## மூதூர் மற்றும் தோப்பூர் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு!

# தௌபீக் எம்.பி விஷேட நடவடிக்கை!



மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசங்களில் பல வருடங்களாக எதிர்நோக்கிவருகின்ற குடிநீர் பிரச்சினையின் உண்மைத் தண்மையை இனம்கண்டு அதற்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பற்காக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீக் எம்.பி நீலாப்பொல நீரேற்றும் நிலையத்திற்கு (Intake Pumping Station) நேற்று (03) விஜயம் செய்தார்.

இந்நிலையில் கள விஜயத்தின் போது நீரேற்றும் நிலையத்திற்கு மகாவெளி நீர் வருவதில்லை, தற்பொழுது நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நீரேற்றும் இடத்திற்கு நீர் கொண்டுவரப்படுகிறது என்பதையும் நீர் இறைக்கும் இயந்திரத்திற்கு ஏதாவது கோளாறு ஏற்படுமாக இருந்தால் நீர்விநியோகம் தடைப்படும் என்பதை அறிந்து, இப்பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு திட்டவரைவொன்றினை கிழக்கு மாகாண பிரதிப் பொதுமுகாமையாளரிடம் கோரியுள்ளதாகவும் விரைவில் உரிய அமைச்சு மற்றும் திணைக்களங்களில் அனுமதியைப்பெற்று நிரந்தரத்தீர்வைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த இவ் விஜயத்தின்போது உதவிப் பொறியியளார்களான அறபாத் மற்றும் சர்ஜூன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கஜேந்திரகுமார் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளமை நாட்டின்

## அதியுச்ச அடக்குமுறை! பா.அரியநேத்திரன்

யாழ். மருதங்கேணிப் பகுதியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுமக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளமை நாட்டின் அதியுச்ச அடக்குமுறை, இது கண்டிக்க வேண்டியது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஊடக செயலாளருமான பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் தேசிய அரசியலில் ஈடுபடும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து கொலை செய்த வரலாறுகள் கடந்த 2009 மே18 க்கு முன்னர் அதிபயங்கரமாக காணப்பட்டது.

2004 தொடக்கம் 2008 வரை மட்டக்களப்பு - ஜோசப் பரராசசிங்கம், யாழ்ப்பாணம் - ரவிராஜ், சிவநேசன், கொழும்பு - மகேஸ்வரன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியில் இருந்த போதே கொலை செய்யப்பட்டனர். மேலும் அம்பாறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு இவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்தார்.

2004 இல் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேர் தெரிவாகியும் அவர்கள் சுதந்திரமாக வடக்கு கிழக்கில் சொந்த மாவட்டங்களுக்கு செல்ல முடியாது கொழும்பில் முடக்கப்பட்ட வரலாறுகள் உண்டு. ஆனால் இப்போது புதிய ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவி ஏற்ற பின்னர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்கள் இல்லாத சூழ்நிலை காணப்பட்ட போது, திடீரென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மீது துப்பாக்கி நீட்டப்பட்ட சம்பவம் பாரிய சம்பவமாகவே பார்க்க வேண்டும்.

ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அவருடைய சொந்த மாவட்டத்தில் சுதந்திரமாக தமது அரசியல் பணியை செய்வதற்கு அச்சுறுத்தலை இராணுவ புலனாய்வாளர்கள் மேற்கொண்டிருப்பது, ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே பார்க்க வேண்டும். எனவே இதற்கான பின்னணி? யார் இதற்கு பொறுப்பு? என்பவற்றை கண்டறிந்து சட்டத்தின் முன் அவர்கள் நிறுத்தப்பட வேண்டும். அதேவேளை சர்வதேச சமூகம் இலங்கை அரசின் அடாவடிதனத்தை கண்டிக்க வேண்டும்.

இந்த நாட்டின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மீது ஆயுதமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அச்சுறுத்தலானது, சாதாரண தமிழ் மக்களின் இயல்பு வாழ்வில் இராணுவம் மற்றும் அரச புலனாய்வாளர்களால் எத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதை மிகத்தெளிவாகக் காட்டியிருக்கிறது.

மக்கள் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமையை மீறி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இக் கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதோடு இச்சம்பவத்திற்கு எனது வன்மையான கண்டனங்களை பதிவு செய்கிறேன் என தெரிவித்துள்ளார்.

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்…

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான படுகொலை முயற்சி இலங்கை அரசினுடைய இனவாத கோரமுகத்தின் மற்றொரு வெளிப்பாடேயாகும்! - என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான அன்புச்சகோதரர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களைச் சுட்டுப் படுகொலை செய்வதற்கு இலங்கை புலனாய்வுத் துறையினர் முயன்றுள்ளது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது.

சமகால அரசியல் சூழலில் ஈழத்தமிழ் மக்களுக்கு இலங்கை அரசால் இழைக்கப்படும் இனவெறிக் கொடுமைகளுக்கு எதிராகவும் தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளுக்கு ஆதரவாகவும்இ வலுவான குரல் கொடுத்து அரசியல் தளத்தில் போராடிவரும் சகோதரர் கஜேந்திரகுமார் மீதான இக்கொடுந்தாக்குதல் இலங்கை இனவாத அரசின் கோழைத்தனத்தையும்இ கோரமுகத்தையுமே மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்துகிறது.

நெஞ்சில் தீரத்துடனும் நேர்மை அறத்துடனும் சமரசமின்றி தமிழீழ விடுதலைக் குரலாக இலங்கை நாடாளுமன்றத்திலேயே ஓங்கி ஒலித்தவரும் தேசியத்தலைவரால் மாமனிதர் என்று போற்றப்பட்டவருமான ஐயா குமார் பொன்னம்பலம் அவர்களைக் கடந்த 2000 ஆம் ஆண்டில் அரசக் கைக்கூலிகள் மூலம் சுட்டுப்படுகொலை செய்தது இலங்கை இனவெறி அரசு. தற்போது தந்தையைப் போலவே சமரசமற்ற அரசியல் தலைவராகத் திகழ்கின்ற அவரது மகன் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இருப்பையும் திரைமறைவில் அழித்தொழிக்கும் இலங்கை இனவெறி அரசின் சதிச்செயலே இக்கொலைமுயற்சி நிகழ்வாகும்.

ஈழத்தில் ஆயுதமேந்திய விடுதலைப்போராட்டம் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகளைக் கடந்தும் இனப்படுகொலை செய்யப்பட்ட இரண்டு இலட்சம் மக்களுக்கான நீதியைப் பன்னாட்டு நீதிமன்றத்தில் இன்னமும் பெறமுடியாமலும் இலங்கை இனவாத அரசால் வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் நிலை குறித்த தகவல்களை அவர்களது குடும்பத்தினருக்கு இன்றுவரை பெற்றுத்தரமுடியாமலும் கடுந்துயரத்தோடும் காயம் சுமந்த கண்ணீரோடும் கையறு நிலையில் ஈழத்தில் தமிழினம் தவித்துவரும் நிலையிலும் தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவெறி அடக்குமுறைகள் இன்னும் நின்றபாடில்லை என்பதை இக்கொடுந்தாக்குதலின் மூலமாவது பன்னாட்டுச்சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் கடும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டு தமிழ் மக்கள் மட்டுமின்றி சிங்கள மக்களும் பசியும்இ பட்டினியுமாக வாழவழியற்று நிற்கும் நிலையிலும் அணுவளவு உரிமையும் தமிழர்கள் பெற்றுவிடக்கூடாது என்பதில் சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் எந்த அளவுக்குத் தீவிரமாக உள்ளார்கள் என்பதை உலக வல்லாதிக்க நாடுகள் இப்போதாவது அறிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் எத்தனை ஆட்சி மாறினாலும் எத்தனை சிங்கள ஆட்சியாளர்கள் மாறினாலும் அவர்கள் எத்தனை நல்லெண்ண நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறினாலும் அவை ஒருபோதும் தமிழர் நலனுக்கு ஒரு சிறிதும் உதவப்போவதில்லை என்பதையும் தமிழரது உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும் சிங்களர்களது இனவெறி மனப்பான்மை மாறப்போவதில்லை என்பதையும் இலங்கை அரசுக்கு ஆதரவாக ஈழத்தமிழ் மக்களின் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்கத் துணைநின்ற உலக நாடுகள் இனியாவது உணரத் தலைப்பட வேண்டும்.

தங்கள் உரிமைக்காக அறவழியில் போராடிய ஒற்றைக் காரணத்திற்காக ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையே படுகொலைசெய்ய முயலுமென்றால் ஈழத்தில் வாழ்கின்ற பாமர மக்கள் என்ன உரிமையைக் கோரி இலங்கை இனவெறி அரசிடம் பெற்றுவிட முடியும் என்பதை இந்தியா உட்பட உலக நாடுகள் ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்தால் தனித் தமிழீழம் மட்டுமே அம்மக்களுக்கான நிரந்தத் தீர்வாக இருக்க முடியும் என்பதை உணர முடியும்.

ஆகவே இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான அன்புச்சகோதரர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மீதான இலங்கை இனவாத அரசின் புலனாய்வுத் துறையினர் நடத்தியுள்ள கொலை முயற்சி தாக்குதலுக்கு இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு தனது கண்டனத்தைத் தெரிவித்து அவருக்கு உரிய பாதுகாப்புகள் வழங்கிடவும் இலங்கை அரசினை எச்சரித்து, வலியுறுத்திட வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தனித்தமிழீழம் எனும் உண்மையான அரசியல் உரிமையைப் பெற்றிட கனடா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து ஈழ விடுதலைக்கான பொதுவாக்கெடுப்பு கோரும் தீர்மானத்தை ஐ.நா. மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றிட வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்

## கஜேந்திரகுமார் மீதான தாக்கு…

அடாவடித்தனத்தை மூடி மறைக்கும் முயற்சியாகும். இச்சம்பவம், அமைதியை விரும்பும் தமிழ் மக்கள் மத்தியில் மிகக் கடுமையான உணர்வலைகளை ஏற்படுத்தி நிற்பதை அரசாங்கம் புரிந்து கொண்டு, அடாவடித் தனத்தில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலர்கள் தொடர்பில் பூரணமான விசாரணை ஒன்றை உடனடியாகவும் விரைவாகவும் நடாத்தி, உரிய நடவடிக்கைகளை சட்டத்தின் பிரகாரம் எடுப்பதற்கு முன்வரவேண்டும்.

இந்த சம்பவம் தொடர்பில், வடகிழக்கு, மற்றும் மலையகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நீதி நிலைநாட்டப்படுவதற்கு ஏதுவாக, சாத்தியமான சகல வழிகளிலும் அரசியல் அழுத்தத்தை பிரயோகிக்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

## மக்கள் பிரதிநிதிகளுக்கே…

மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஒருவர் நாட்டில் சுந்திரமாக செயற்பட முடியாத ஜனநாயக சூழல் காணப்படுகிறது என்றால் அப்பாவி தமிழ் மக்களின் நிலைமையை எண்ணிப்பாருங்கள்? அவர்கள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பதனை சிந்தித்து பாருங்கள் எனத் தெரிவித்துள்ள அவர் தன்னுடைய மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை, பிரச்சினைகளை கேட்டறிவதற்கு கூட ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு இந்த நாட்டில் சுந்திரம் இல்லாத நிலைமை வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான கண்காணிப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பன தமிழ் மக்கள் மீது யுத்தம் நிறைவுற்று 14 ஆண்டுகள் கடந்தும் இடம் பெற்று வருகிறது. இது இனங்களின் நல்லிணக்கத்திற்கும், நிலையான சமாதானத்திற்கும் ஏற்புடையதல்ல. இவ்வாறான சம்பவங்கள் இனங்களுக்கிடையே குரோதத்தை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே செல்லும்.

எனவே இச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் மற்றும் அவரது செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கஜேந்திரகுமார் மீதான செயற்…

இதனை அவர் தெரிவித்துள்ளார் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சியையும் அவர் மீதான தாக்குதலையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

யாழ் வடமராட்சி கிழக்கு பகுதியில் மக்கள் சந்திப்பில் அவர் ஈடுபட்டிருந்த போது அங்கு புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அவர் அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன் அவர் மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவதை நாம் இலங்கை அரசின் ஜனநாயக விரோத செயலாகவே பார்க்கின்றோம். நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காமல் இவற்றை தடுக்க முன்வரவேண்டும். இவ்வாறு தமிழர் பிரதிநிதிகளை அச்சுறுத்தும் அரச புலனாய்வாளர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதலானது ஏனைய அரசியல் தலைவர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் விடுக்கும் அச்சுறுத்தலாகவே நாம் பார்க்கின்றோம் என்றுள்ளது.

## கஜேந்திரகுமார் மீதான தாக்கு…

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் குறைகேள் செயற்பாடுகளையும் அரசியல் செயற்பாடுகளையும் முன்னேடுக்கும் போது புலனாய்வாளர்களின் இடையூறுகள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

எனினும் இவற்றை பொருட்படுத்தாது பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது செயற்பாடுகளை முன்னேடுத்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் காவலர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டு வரும் நிலையில் அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் புலனாய்வாளர்களை வைத்து செயற்படுத்த முனைவதானது தமிழ் மக்களுக்கே இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பதை புடம்போட்டுக் காட்டுகின்றது.

இந்நிலையில் கஜேந்திரகுமார் மீதான தாக்குதல் முயற்சிக்கு தகுந்த விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறாத வகையில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட…

அவர் தொடந்து கருத்து தெரிவிக்கும் போது, நேற்றைய தினம் (02.06.2023) நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மருதங்கேணிப் பகுதியில் பொதுமக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளமை இந்த நாட்டின் இன அழிப்பு நடவடிக்கையின் புதிய வடிவத்தையே காட்டி நிற்கின்றது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களை கொன்றொழித்து படுகொலைகளை செய்த ஜேர்.ஆர். ஜெயவர்தனவின் மருமகனான ரணில் அரசின் இந்த செயற்பாடானது இந்த நாட்டிலே அதியுச்ச அடக்குமுறையையே காட்டி நிற்கிறது.

இதேவேளை இந்த நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருமான வரி திணைக்களத்திலே பதிவு செய்து தங்களுடைய உழைப்பு வருமானங்களுக்கு வருடாந்தம் வரி செலுத்த வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. ஒரு நாட்டிலே வரி அளவிடுவது என்பது மிக நல்ல விடயம். ஆனால் ஒரு நான்கு வயது தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட பிள்ளை சுயமாக பாடசாலைக்கு சென்று கல்வி கற்க முடியாத, அதாவது பருவகாலச் சீட்டை பெற்று இலங்கை போக்குவரத்து சபை பேருந்தில் பயணம் செய்து தமது கல்வியை தொடர முடியாத நிலை உள்ளது.

மேலும் ஒரு மாணவனின் கல்வி நடவடிக்கைகளில் ஒரு வசதியை செய்து கொடுக்காத இந்த அரசாங்கம், 18 வயதிற்குப் பின்னர் அவர்களிடமிருந்து வரியை அறவிடுவது என்பது மிக மோசமான நிலைமையை காட்டி நிற்கின்றது. இந்த அரசாங்கத்தில் பலர் பல் வேறுபட்ட மோசடிகளை செய்து போயிருக்கின்றார்கள். மத்திய வங்கியில் பல மில்லியன் கணக்கிலே கொள்ளையடித்து சென்றவர்களை இதுவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த முடியாத இந்த அரசாங்கம்.

சீனியிலும் தேங்காய் எண்ணெயிலும் ஊழல் மோசடி செய்த கோட்டாபய குடும்பத்தை கைது செய்து விசாரணை செய்யவும் திராணியற்ற ரணில் அரசாங்கம். இங்கே பல ஊழல்களில் ஈடுபட்டு விடுதலைப் புலிகளிடமிருந்து நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்து வெளிநாட்டு வங்கிகளிலே வைப்பிலிட்டு வைத்திருப்பவர்களுக்கு இதுவரையும் எந்த விசாரணைகளும் மேற்கொள்ளவில்லை.

இருபது தலைமுறைகளுக்கு தேவையானவற்றை சேமித்து வைத்துவிட்டு இருக்கின்ற மகிந்த ராஜபக்ச குடும்பத்தை விசாரிக்கவும் இந்த அரசாங்கம் இன்று தயாராக இல்லை. இந்த நாடு எப்பொழுதும் கொள்ளையடித்தவர்கள் களவெடுத்தவர்களினுடைய பக்கத்தில் தான் நிற்கின்றது. இந்த தீவில் ஒரு நீதியான ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மகிந்த ராஜபக்ச குடும்பம் விசாரிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்ற உறுப்பினருக்கே…

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பொலிஸ் உள்ளடங்கலாகப் பாதுகாப்புத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கடுமையாகக் கண்டிப்பதாகத் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே இவ்வாறு நடத்தப்படும் பட்சத்தில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் சிங்களமொழி பேசும் பொலிஸாரின் உதவியுடன் இராணுவத்தினரால் எவ்வாறு நடத்தப்படக்கூடும் என்பதை ஒட்டுமொத்த உலகமும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்குமாறும், குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சி.வி.விக்கினேஸ்வரன் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். அதுமாத்திரமன்றி குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதில் தாமதமேற்படும் பட்சத்தில், அது அவர்களை மேலும் ஊக்குவிக்கக் கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களை முட்டாளாக்கும் முயற்சியை முட்டாள்கள் கைவிட வேண்டும்:சுகாஸ்



தையிட்டி சட்டவிரோத கட்டுமானதிற்கு எதிரான போராட்டம் தமிழ் மக்களுடைய அபிலாசைகளை வலியுறுத்தி தீவிரமாக முன்னெடுக்கப்படுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்துள்ளார்.

இந்த போராட்டத்தின் வாயிலாக தமிழ் மக்களின் அபிலாசைகள் வெளிப்படுத்தப்படும் அதேவேளை இந்த போராட்டத்தை சிறுமைப் படுத்தி கொச்சைப்படுத்த முற்பட்டவர்களுக்கு ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழர்களுடைய தாகம் ஒருபோதும் குறையாது. தமிழர்களை முட்டாளாக்கும் முயற்சியை முட்டாள்கள் கைவிட வேண்டும் என கூறியுள்ளார்.

# பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மீதான தாக்குதல் தெடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும்

## மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர்




பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் வடமராட்சி பகுதிக்கு மக்கள் சந்திப்புக்காக சென்ற வேளை புலனாய்வாளர் ஒருவரால் தாக்குதலுக்கு உள்ளானதாகவும், அவ்விடத்துக்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியை காட்டி மிரட்டியதாகவும் தொலைபேசி மூலமாக முறையிட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் உடனடியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தெரியப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களிடம் எழுத்து மூலமாக முறைப்பாடு வழங்குமாறும், அவ்வாறு வழங்கிய பின்னர் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

# அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின்

## புதிய வரைவு தொடர்பில் சுமந்திரன் அதிருப்தி



இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் புதிய வரைவு, சிறுபான்மை இனத் தமிழர்களின் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளை கூட பூர்த்தி செய்யத் தவறிவிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இக்கருத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் உள்நாட்டுப் போரின் போது கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டனர். அத்துடன் படையினரின் வேண்டுகோளின் பேரில் சரணடைந்த, சரணடைய செய்யப்பட்டவர்களும் காணாமல் போயுள்ளனர்.

இந்தநிலையில், மேற்குலக நாடுகளில் வாழும் தமிழர்கள் ஐக்கிய நாடுகளின் மனிதஉரிமைகள் பேரவைக்கு அந்தந்த அரசாங்கங்கள் ஊடாக வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தீர்மானம் ஒன்றின் மூலம் தீர்வு காண முனைப்புக்களை மேற்கொள்கின்றனர்.

இதற்கு மத்தியில், போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையில் வெளிநாட்டின் தலையீட்டை இலங்கை எதிர்த்த போதிலும், 2016 ஆம் ஆண்டு முதல் தென்னாபிரிக்க மாதிரி உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாக, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபச மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இருவரும் அண்மையில் தென்னாபிரிக்காவிற்கு பயணம் செய்தனர்.

எனினும் களத்தில் எதுவும் நடக்கவில்லை என்று எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் சில சட்டங்களைக் கொண்டுவர இலங்கை அரசாங்கத் தரப்பினர் முயற்சிக்கின்றனர். ஆனால் மீண்டும் அவர்கள் யாரையும் கலந்தாலோசிக்க முயற்சிக்கவில்லை. அவர்கள் வரைவைக் கொண்டு வந்து தமது கருத்துக் கேட்டனர். ஆனால் கருத்து சொல்ல எதுவும் இல்லை. அதில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. அத்துடன் பொறுப்புக்கூறல் அல்லது மன்னிப்பு பற்றி அதில் எதுவும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் இன நல்லிணக்கத்திற்கான தனது முயற்சிகளின் ஒரு பகுதியாக இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டத்தை அறிமுகப்படுத்த விரும்புகிறது.

எனினும் ஆயிரக்கணக்கான உறவினர்கள் ஏற்கனவே சுமார் 15 ஆணைக்குழுக்களில் தமது சாட்சியங்களை வழங்கியுள்ளதாகவும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் கடந்தகால மனித உரிமை மீறல்களை நிவர்த்தி செய்வதற்காக காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் என்பவற்றை உருவாக்கியது.

எனினும் அந்த அலுவலகங்கள் முன்னோக்கி நகரவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.







தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!
SCAN ME



அ. கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS



- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.

We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |








இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.